ருவன்வெல்ல பிரதேச சபை - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ருவன்வெல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் ருவன்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் நடைமுறையல்லா சொத்து மீதி மற்றும் மூலதன கணக்கிற்கு வருமானத்தால் பங்களிக்கும் மீதிக்கிடையில் ரூபா 4,206,770 ஆன வித்தியாசம் நிலவியது. | கணக்கு மீதிகளின் வித்தியாசத்தை கண்டறிந்து சரிசெய்வதாக. | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | பிரதேசத்தில் உள்ளூராட்சி திணைக்களத்தால் 2022 திசெம்பர் மாதத்திற்காக மீள்நிரப்பிய சம்பளத்திலும் ரூபா 276,550 கூடுதலாக அப்பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | - மேற்படி - |
| (இ) | நிலையான வைப்புக் கணக்கொன்றில் மீளாய்வாண்டிற்குரிய வட்டி ரூபா 1,713,973 வை வருமானமாக கருதுவதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக் கணக்கை மூடியதுடன் குறித்த மொத்த வட்டியையும் காசுப் புத்தகத்தை வரவு வைத்து முதலீட்டுக் கணக்கை செலவு வைத்ததாக. | கணக்கை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஈ) | நிலையான வைப்பு வட்டி ரூபா 1,409,884 காசுப் புத்தகத்தில் குறைவாகவும், வருமான கடன்படுனர் நிலையான வைப்பு வட்டி கணக்கில் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 2021 ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டண குறை ஒதுக்கீடு ரூபா 119,200 யை மீளாய்வாண்டு திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்குவதற்கு பதிலாக செலவிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு இறுதிக் கணக்கில் செம்மையாக்குவதாக. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மூலதன தன்மையிலான ரூபா 243,000 ஆன செலவு, மீண்டெழும் செலவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறாயின் இதன் பின்னர் அச் செலவை மூலதன செலவாகக் கருதி நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டிற்காக 2023 ஆண்டில் செலுத்திய ரூபா 59,450 இற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இக் கொடுப்பனவிற்காக ஒதுக்கீடு செய்வதாக. | - மேற்படி - |
| (ஏ) | செலுத்திய சட்டத்தரணி கட்டணம் ரூபா 50,000 வெளிநாட்டு பிரயாண செலவுக் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அவ்வாறு செய்யாதிருக்க நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (ஐ) | ரூபா 173,714 ஆன ஆயர்வேத மருந்து இருப்பொன்று நிதி நிலைமை கூற்றிற்கு எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | - மேற்படி - |
| (ஒ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டிய அன்பளிப்பொன்று ரூபா 5,409,897 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கபபட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | - மேற்படி - |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் 03 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மீதி மற்றும் பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் அம் மீதிக்கிடையில் ரூபா 4,978,484 ஆன வித்தியாசம் நிலவியது. | 2023 ஆண்டில் சரிசெய்வதாக. | இணக்கமின்மையை சரிசெய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 07 கணக்கு விடயங்களின் மீதி துணை பதிவேடுகளுடன் இணக்கஞ செய்கையில் ரூபா 17,534,459 ஆன வித்தியாசம் நிலவியது. | 04 கணக்கு விடயங்களிற்காக இறுதிக் கணக்கிற்காக வழங்கிய தகவல்களின் பிரகாரம் சரியானதென மற்றும் எஞ்சிய வித்தியாசத்தை ஏற்பதாக. | - மேற்படி - |

### 1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக பாடநெறியொன்றை பயில்வதற்காக உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 30,000 செலுத்தியிருந்தமை, பிரதேச சபை சட்டத்தின் 132 பிரிவிற்கு இணக்காத கொடுப்பனவொன்றானது. | பொது சபை தீர்மானத்தின் மீது கொடுப்பனவு செய்துள்ளதாக. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 21,412,889 ஆன 02 நிலையான சொத்து விடயங்களில் சரியான தன்மையை உறுதி செயவதற்கு அட்டவணைகள் எதுவும் சமர்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | அட்டவணைகளை சமர்பிக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | | | |
| i. நி.பி. 571 | ரூபா 4,020,966 ஆன வைப்புக்கள் 02 ஆண்டுகளிற்கும் 09 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமொன்று பொது வைப்புப்புக்கள் தீர்க்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்க அல்லது மீள் செலுத்தவும், மீள் பெற்றுக் கொள்ளாத வைப்புக்களை அரச வருமானத்திற்கு எடுப்பதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 12,203,932 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 17,467,974 ஆனம்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் வரி | 5,990,289 | 8,467,619 | 9,165,795 | 4,586,367 | 6,266,137 | 6,074,189 | 4,932,161 | 5,151,385 |
| வாடகை | 18,738,663 | 21,300,685 | 24,054,670 | 6,847,788 | 17,146,200 | 18,582,399 | 19,361,933 | 10,771,924 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 695,050 | 691,225 | 633,000 | - | 890,050 | 653,516 | 676,516 | - |
| ஏனைய வருமானம் | 3,219,578 | 13,788,054 | 8,877,358 | 8,979,131 | 13,206,010 | 7,726,643 | 7,726,643 | 4,005,185 |
| | 28,643,580 | 44,247,583 | 42,730,823 | 20,413,286 | 37,508,397 | 33,036,747 | 32,697,253 | 19,928,494 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரி, ஏக்கர் வரி, கடை வாடகை மற்றும் ஏனைய வருமான விடயங்களில் 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 12,132,855 அறவிட வேண்டியதாக நிலவியது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழைய ரூபா 7,488,183 ஆன மீதியும் 05 ஆண்டுகளை விட பழைய ரூபா 4,113,342 ஆன மீதியும் காணப்பட்டது. | நிலுவையை குறைக்க தேவையான நடவக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நாளாதுவரையாக ஆதன மதிப்பீடு செய்யாததால் 6 ஏக்கர் 21 பர்சஸ் ஆன 10 காணிகளின் பெறுமதி ரூபா 68,947 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டில் மதிப்பீடொன்றை செய்வதாக. | ஆதனங்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | வாகன வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள தாமதித்ததால் ரூபா 28,105 தண்டமாக செலுத்தப்பட்டிருந்தது. | பொறுப்புவாய்ந்தவரிடமிருந்து அத் தொகையை அறவிடுவதாக. | பொறுப்புவாய்ந்தவரிடமிருந்து அறவிட வேண்டும். |
| (இ) | 07 காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்குகளிற்கு எடுத்திருக்கவில்லை. | கணிப்பீடு மேற்கொண்ட பின்னர் முன்நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் மூன்று ஆண்டுகளிற்கு ஒரு முறை இறைச்சி மற்றும் மீன் வியாபார நிலையங்களிற்காக குறைந்த பட்ச மணுத் தொகையை அரச மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றிருக்கவில்லை. | அரச மதிப்பீட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 40 கடையறைகளிற்காக 2022 ஆண்டிற்கு உடன்படிக்கை செய்திருக்கவில்லை. | தெளிவாக பதில் வழங்கப்படவில்லை. | உடன்படிக்கை செய்யப்பட வேண்டும். |
| (இ) | மின் வலு மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகளுக்கு இணங்காதவாறு அங்கீகாரமின்றி 2020 ஆண்டு முதல் 2022 வரையான ஆண்டுகளில் 940 புதிய வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. | இது தொடர்பாக எமது நிறுவனம் அறிந்திருக்கவில்லையென. | அங்கீகாரத்தின் மீது வீதி விளக்குகள் பொறுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக 2014 ஆண்டு முதல் 2022 செப்டம்பர் வரை இடைத்த 78 முறைபாடுகளில் 63 இனை தீர்த்திருக்கவில்லை. | அந்த அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக தாமதமின்றி செயற்பட வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 இன் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் சபைக்கு சொந்தமான 94 காணிகள் மற்றும் 170 கிணறுகள் காணப்பட்ட போதும், 2022 ஆண்டின் சொத்துக்கள் கணிப்பீட்டின் பிரகாரம் சபைக்கு சொந்தமான சொத்தாக 45 காணிகள் மற்றும் 13 கிணறுகள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தன. | 2023 ஆண்டில் சொத்துக்கள் கணிப்பீடொன்றை செய்வதாக. | சொத்துக்கள் கணிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | பதிவு இலக்கம் இன்றி செயலற்று நிலையிலுள்ள 7 வாகனங்கள் மற்றும் பெறுமதி ரூபா 2,104,027 ஆன பழுதடைந்த 05 வாகனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பராதீன செயற்பாடுகள் தற்போது இடம்பெறுவதாக. | பொருத்தமானவாறு பராதீனம் செய்ய அல்லது திருத்த வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் 133 ஆன அங்கீகார ஆளணியில் 31 வெற்றிடங்கள் மற்றும் 06 மிகையும் காணப்பட்டன. அங்கீகார ஆளணியில் 23 பேர்களின் பதவி வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட வகைளில் அங்கீகரிக்கப்பட் பதவிகளாகும். | அங்கீகார ஆளணியை திருத்த நி.பி 71 பிரகாரம் கோரிய போதும், அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லையென. | அங்கீகார வெற்றிடங்களை நிவர்த்தி செய்து மிகையை ஆக்கபூர்வமாக இணைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 04 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 342,211 ஆன கடன் மீதி 03 ஆண்டுகளிற்கும் 24 ஆண்களிற்கு இடையிலான காலத்தினால் பழைமையானது. | கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை கடன் தொகையை அறவிட வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| ருவன்வெல்ல மத்திய நூலகத்தில் திருத்த வேலைகள் பூர்த்தியாகி இருக்காததால் இந்த நூலகத்திற்கு டிஜிடல் மயமாக்க வழங்கியிருந்த ரூபா 1,173,419 ஆன உபகரணங்கள் பயன்படுத்தப்படாது நிலவன. | இவ் வேலைக்கான உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் மீண்டும் மதிப்பீடு தயாரித்து உதவிக் குழுவிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாக. | சொத்துக்களை பயன்பாடின்றி வைக்கக்கூடாது. |